2012 மே 15]

கொண்டை ஊசி வளைவு என்கின்ற பெரிய வளைவு இருக்கிறது. அந்த வளைவிலே அடிக்கடி விபத்துகள் நடைபெறுகின்றன. அந்தக் கொண்டை ஊசி வளைவின் அருகில் பெரிய பாறாங்கல் இருக்கிறது. அந்தப் பாறாங்கல்லை அகற்றி, அந்த வழியைச் சீர்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அடிக்கடி விபத்துகள் ஏற்படுவதாகத் தெரிவித்திருக்கின்றார்கள். விபத்து ஏற்படுகின்ற அந்தப் பகுதியினை ஆய்வு செய்து, அந்த ஆய்வின் அடிப்படையிலே அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 267, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

267—

குத்து விளக்குகள்

***3059—முனைவர் கோவி. செழியன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவிடைமருதூர் தொகுதி, நாச்சியார்கோவிலில் உள்ள பூம்புகார் உற்பத்தி நிலையத்தில் குத்து விளக்குகள் உருவாக்கும் தொழிலை ஊக்கப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திருவிடைமருதூர் தொகுதி, நாச்சியார்கோவிலில் உள்ள பூம்புகார் தொழிற்கூடத்தில் கலையம்சங்களுடன்கூடிய குத்து விளக்குகள் உருவாக்கும் பூம்புகார் தொழிற்கூடத்தில் பணிபுரியும் அனைத்துக் கைவினைஞர்களையும் ஊக்கப்படுத்தும் வகையில், அவர்களுக்கு, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர்

புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு பொறுப்பேற்றவுடன், 1-6-2011 முதல் 100 சதவீத கூலி உயர்வு அளிக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்து அமருகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள், இருக்கையில் இல்லை.*

வினா வரிசை எண் 268, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

268—

மெருகிடும் தொழிற்சாலை

***6632—திரு. டி. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதியில் கிரானைட் மெருகிடும் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தளி தொகுதியில் கிரானைட் மெருகிடும் தொழிற்சாலை அமைப்பதற்கும் அங்கு மதிப்புக் கூட்டப்பட்ட கிரானைட் கற்கள் தயாரித்து சந்தைப்படுத்துவதற்கும் மற்றும் சந்தை நிலவரம் அறிந்து, நிதிநிலைமைக்கேற்ப மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள்.*

முற்பகல் 10-40

திரு. டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தளி தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் டாமின் நிறுவனத்திற்குச் சொந்தமான விலை உயர்ந்த பிளாக் கிரானைட், மல்டி கலர் கிரானைட், பாக்ஸ் பாரடைசோ,*

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS